**செய்தி வெளியீடு எண்:353** **நாள்: 05.06.2017**

# செய்தி வெளியீடு

**<u>பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் தொழில் நுட்ப உதவியுடன் கூடிய நீர் சார்ந்த தொழில் முனைதல் குறித்த கருத்தரங்கம்</u>**

சென்னை, கிண்டியிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழிற்பேட்டை சங்கங்கள் மூலமாகவும், தொழில் வல்லுநர்கள் மூலமாகவும் தொடர்ந்து தொழில் முனைவோருக்கும் / தொழிலில் ஈடுபட விருப்பம் உள்ளவர்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தி வருகிறது.

பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையம் அதன் தொழில்நுட்பத்தின் ஒரு பகுதியாக நீர் சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைப்பதற்கு திட்டங்கள் வகுத்துள்ளது. இத்திட்டங்களின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எளிய முறையில் உற்பத்தி செய்து தொழில் முனையும் வாய்ப்புகளை தருகிறது. மேலும், இந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப இணைப்பு அனுமதியும் தொழில் செய்பவர்களுக்கு வழங்குகிறது. தற்பொழுது, குடிநீர் / சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி செய்யும் தொழிலில் உள்ளவர்களுக்கும் மேலும் இத்தகைய தொழிலில் முனைய முற்படுபவர்களுக்கும் ஒரு உதவிகரமான முன்னோடி திட்டமாக இவை அமைந்துள்ளது.

இந்த தொழில் நுட்பங்களின் விரிவாக்க ஆலோசனை கருத்தரங்கம், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலமாக சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் வரும் 19, 21, 22, 23 ஜூன் மாதத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் மூலம் தொழில் தொடங்குவதற்கு அதிக பட்சமாக ரூ,10 இலட்சம் வரை தேவைப்படலாம். இந்த தொழிலில் முனைய முற்படுவோர் மற்றும் இது சார்ந்த தொழில் நடத்தி வருபவர்கள் தங்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்த இந்த கருத்தரங்குகளில் கலந்து பயன் பெறலாம். இது ஒரு நாள் முழுவதுமான கருத்தரங்கமாக அமைக்கப்பட்டுள்ளது. காலையில் தொழில் நுட்ப விபரங்களும், மாலையில் தொழில் நுட்ப பயிற்சியும் வழங்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் பயிற்சி பெறுவோர் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு பயிற்சி பெற விரும்புபவர்கள் அனுமதி கட்டணமாக ரூ.1000 செலுத்த வேண்டும். பயிற்சியின் பொழுது உணவு மற்றும் தேநீர் வழங்கப்படும். முன்பதிவு செய்பவருக்கு கடைசி தினம் 14 ஜூன் 2017. இது சம்பந்தமான மேலும் விபரங்களுக்கும் தங்களின் பெயரை பதிவு செய்து கொள்ளவும் திரு. தினேஷ் குருதேவ் (7550248759) அவர்களை தொடர்பு கொள்ளவும். (மின்னஞ்சல்: asst-cdp@editn.in).

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**